**55 சங்கத்தார் கலகம் தீர்த்த படலம**

சங்கப் புலவரகள் நாற்பத்தெட்டு பேரும் வெவ்வேறு தமிழ் பாக்கள் இயற்றி மிகவும் செருக்குற்றிருந்தார்கள். தங்களுக்குள் வேற்றுமைகள் கொண்டார்கள். அவர்கள் சோமசுந்தரரிடம் சென்று அவர்களுடைய பாடல்களை சீர்தூக்கிப் நிறை குறைகளை எடுத்துக்காட்டி அருளுமாறு வேண்டினர்.

சிவபெருமான் அவர்களிடம் தனபதி என்ற வணிகனுக்கும் அவன் மனைவிக்கும் பகலவன்என்றொரு அழகிய ஊமை பாலகன் உள்ளான். அவன் முருகனது அவதாரம் ஆகும். அவன் முன்இவர்கள் தங்கள் பாடல்களைப் பாடினால் அவன் அவர்களின் பாடல்களின் தன்மைகளைசீர்தூக்கி உணர்த்துவான் என்றார். ஊமையினால் எவ்வாறு நல்லன தீயனக் கண்டு சொல்லமுடியும் என்று ஐயம் கொண்ட புலவர்களுக்கு, பாட்டின் தரத்தை தலையசைத்தே உணர்த்துவான் என்று கூறிய ஐயன் கோயிலினுள் சென்று மறைந்தார்.

சங்கப் புலவர்கள் தத்தம் பாடல்களை பகலவன் முன் பாடினார்கள். அதனதன் சிறப்புகளில் தலையசைத்தும், முகபாவத்தாலும் காட்டினான்

பாலகன். நக்கீரன், பாணன், கபிலன் ஆகியமூவருடைய பாடல்களை கேட்கும் போது கண்ணீர் சிந்தி மெய் சிலிர்த்தான் அப்பாலகன். தராசினைப் போல் புலவர்களுக்கு பேசாமலேயே பாடல்களின் தரத்தை உணர்த்தினான் வணிககுமாரன். புலவர்கள் அனைவரும் குரோதம் நீங்கி நட்புடன் வாழ்ந்தனர். நக்கீரன், கபிலன், பாணன் என்னும் மூவரது பாடல்கள் உலகமெங்கும் பரவின. தெய்வப் புலவரகள் அனைவரும் சிறப்புடன் வாழ்ந்தனர்.

**பல்லவி**

சங்கப் புலவர்களின் பாடலின் தரத்தை
அறிந்துகொள்ள அவர்கள் உன்னை வேண்டினர்

**அனுபல்லவி**

சங்கைதனைத் தீர்க்க முருகன் அவதாரமாய்
தன பதிக்கொரு ஊமைப்பிள்ளை இருக்கிறான் என்றாய்

**சரணம்**
பாடலை சிறுவனும் மெய்ப் பாட்டினாலேயே
மகிழ்ந்து இகழ்ந்து புகழ்ந்து புலப்படுத்தினான்
பாடல்களில் நக்கீரன், கபிலன், பரணன்இம்
மூவ ர்பாடலும் மிக சிறந்த தென்று காட்டினான்